**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***19th ஏப்ரல் / April 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. மெர்சி நோயல்**
Call to Worship — Mrs. Mercy Noel

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. மெர்சி நோயல்**
Prayer — Mrs. Mercy Noel

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**எப்போதும், இயேசு நாதா,**

*1. எப்போதும், இயேசு நாதா,*
*உம்மைப் பின்பற்றுவேன்*
*என்றே தீர்மானமாக*
*நான் வாக்குக் கொடுத்தேன்:*
*நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்,*
*அப்போது அஞ்சிடேன்;*
*முன்சென்று பாதை காட்டும்,*
*நான் வழி தவறேன்.*

*2. பூலோக இன்பம் செல்வம்*
*வீண் ஆசாபாசத்தால்,*
*என் ஆத்மா மயங்காமல்*
*தெய்வீக பலத்தால்*
*நீர் துணைநின்று தாங்கும்,*
*என் அருள் நாயகா?*
*தீங்கணுகாமல் காரும்,*
*மா வல்ல ரட்சகா.*

*3. ஆங்காரம் சுய சித்தம்*
*தகாத சிந்தையால்*
*மா கலக்கம் உண்டாகி*
*நான் தடுமாறினால்,*
*நீர் பேசும் அருள் நாதா,*
*கொந்தளிப்படங்கும்;*
*உம் நேச சத்தம் கேட்டு*
*என் ஆவி மகிழும்.*

*4. 'பின்பற்றினால் விண் வீட்டில்*
*பேரின்பம் பெறுவீர்,'*
*என்றே உம் சீஷர் நோக்கி*
*நீர் வாக்கு அளித்தீர்;*
*அவ்வருள் வாக்கை நம்பி*
*இவ்வேழை அடியேன்*
*"இதோ பின்செல்வேன்," என்று*
*பிரதிக்னை பண்ணினேன்.*

✝ **மாறி வாசித்தல் *16*ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
**"சங்கீதம் *42*"** — Congregation

**"என் ஆத்துமா தேவன்மேல் தாகமாயிருக்கிறது"**

**Psalter Reading "Psalm 42"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்**

**விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்**
**விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்**

*1.* பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றும் அந்தப்பெயரே,

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும் யேசுவென்றால் பறந்தோடியே போகும்,

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும்,

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்றுநிறைந்திருக்கும்,
எல்லா நாளும் மாறாச்செல்வம் யேசுவென்ற பெயரே,

5. என்னாண்டாவா, என் ஜீவனே, என் மார்க்கமே முடிவே
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே.

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மிஸ். ஜேனட்**
**லூக்கா *24 : 13 – 35*** — Miss. Janette
Scripture Reading
Luke 24 : 13 – 35

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**

Offertory & Closing Song — Congregation

**<u>இயேசுவின் நாமமே திருநாமம்</u>**

**இயேசுவின் நாமமே திருநாமம் -முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்.**

*1.* காசினியில் அதனுக்
கிணையில்லையே; - விசு
வாசித்த வர்களுக்குக்
குறையில்லையே.

*2.* இத்தரையில் மெத்தவதி
சயநாமம்; - அதை
நித்தமுந் தொழுபவர்க்கு
ஜெயநாமம்.

*3.* உத்தம மகிமைப் பிரசித்த
நாமம்;
- இது சத்திய விதேய
மனமொத்தநாமம் .

*4.* விண்ணவரும் பண்ணுடன்
கொண்டாடும் நாமம் - கடி
கண்டதிர்ந்து பயந்தோடு
தேவநாமம்

*5.* பட்சமுடன் ரட்சைசெயு
முபகாரி, - பெரும்
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி.

**அறிவிப்புகள்**
Announcements

† **<u>மனப்பாட வசனங்கள்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verses</u> — Congregation

***சங்கீதம் 118 : 23 - 24***
Psalm 118 : 23 - 24

***23. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு
ஆச்சரியமாயிருக்கிறது.
24. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து
மகிழக்கடவோம்.***

† **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

† **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

† **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**